செய்தி வெளியீடு எண்: 388 நாள் : 18.07.2013

**பத்திரிக்கைச் செய்தி**

**பார்வைத்திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு ஓராண்டுக்கால புத்தகம் கட்டுபவர் பயிற்சி**

மாற்றுத் திறனாளிகள் மாநில ஆணையரகத்தின் கீழ் இயங்கும் பூவிருந்தவல்லியிலுள்ள பார்வைத்திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான அரசு தொழிற்பயிற்சி மையத்தில் **புத்தகம் கட்டுபவர்** (ஆண்கள்/பெண்கள்) தொழிற் பயிற்சிப் பிரிவில் விடுதி, உணவு, பயிற்சிக்குத் தேவையான உபகரணங்களுடன் கூடிய வசதியுடன் ஒராண்டு பயிற்சியளிக்கும் பொருட்டு பார்வைத்திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது 2013–2014ம் ஆண்டிற்கு இப்பயிற்சியாளர்கள் சேர்க்கைக்காக **31.07.2013** முடிய விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. விண்ணப்பதாரர்கள் ஜூலை 2013 முதல் நாளன்று 14 வயது முடித்தவராகவும் 40 வயதுக்கு உட்பட்டவராகவும், எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவராகவும் இருத்தல் வேண்டும். விண்ணப்பங்களை ஜவஹர்லால் நேரு உள்வட்ட சாலை, கே.கே. நகர், சென்னை – 600 078 ல் இயங்கி வரும் மாற்றுத்திறனாளிகள் மாநில ஆணையரகத்தில் அல்லது சென்னை பூவிருந்தவல்லியில் செயல்படும் பார்வைத்திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுகான அரசு தொழிற்பயிற்சி மையம், அல்லது ஒவ்வொரு மாவட்டத்திலும் செயல்படும் மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தை அனுகி பெற்றுக்கொள்ளலாம்.

வெளியீடு:

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9